பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 15 வெள்ளிக்கிழமை 30.12.2022 கதிர் 306

## விடுதியில் வாள்வெட்டு; இளைஞர் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம் – நல்லூர் கோயில் வீதியிலுள்ள தனியார் விடுதி ஒன்றுக்குள் மர்மக் கும்பல் நுழைந்து நடத்திய வாள்வெட்டுத் தாக்குதலுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த இளைஞர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் 2



## ஒரு புகழ்பெற்ற நூற்றாண்டு கடவுளின் காலடியில் சங்கமம்

### தாயாரின் மறைவு குறித்து மோடி உருக்கம்

ஒரு புகழ்பெற்ற நூற்றாண்டு கடவுளின் காலடியைச் சேர்ந்துள்ளது என்று தனது தாயாரின் (ஹீராபென் மோடி – வயது 100) மறைவு தொடர்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது ருவிட்டரில் உருக்கமாகப் பதிவிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

என் தாயிடம், ஒரு துறவியின் பயணத்தையும், தன்னலமற்ற கர்மயோகியின் அடையாளத்தையும், அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையையும் உணர்ந்துள்ளேன்.

100 ஆவது பிறந்தநாளில் நான் அவரைச் சந்தித்தபோது, அவர் ஒரு விடயத்தைச் சொன்னார். புத்திசாலித்தனத்துடன் வேலை செய்யுங்கள், தூய்மையுடன் வாழ்க. அதாவது, புத்திசாலித்தனத்துடன் வேலை செய்யுங்கள், தூய்மையுடன் வாழ்க்கையை வாழுங்கள் என்பதே. இது எப்போதும் நினைவில் இருக்கின்றது – என்றுள்ளது.

## மோடியின் தாயாரின் மறைவுக்கு அரசியல் தலைவர்கள் இரங்கல்



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் தாயார் ஹீராபென் மோடியின் (வயது 100) மறைவுக்கு இலங்கை அரசியல் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

திடீர் உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டு, அகமதாபாத்தில் உள்ள யு.என்.மேத்தா இதய நோய் வைத்தியசாலையில் நேற்று முன்தினம் சேர்க்கப்பட்ட ஹீராபென்மோடிசிகிச்சைபலனின்றி இன்று காலமானார். 8

## போதைப்பொருள் வர்த்தகம்: அரசியல்வாதிகள் தொடர்பு

### விஜித ஹேரத் எம்.பி. குற்றச்சாட்டு



இலங்கையில் மிகப் பெரிய போதைப்பொருள்வர்த்தகத்துக்குப் பின்னால்நாடாளுமன்றத்திலுள்ள உயர்மட்ட அரசியல்வாதிகள் உள்ளார்கள். இவர்களைத்தண்டித்தால் இந்தப் போதைப்பொருள் பாவனையை ஒழிக்கலாம்.

– இவ்வாறு ஜே.வி.பியின் 2

## அரசியல்வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை: ஆதாரம் வேண்டும் என்கிறார் நீதி அமைச்சர்



இலங்கைக்குப் போதைப் பொருட்களை உயர்மட்ட அரசியல்வாதிகளே கொண்டு வருகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படும் பின்னணியில், இதற்கு ஆதாரங்களைத் தந்தால் குறித்த அரசியல்வாதிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதி அமைச்சர் 2

# 32 அரசியல் கைதிகளின் விடுதலையை பெப்.4 இற்கு முன் உறுதிப்படுத்துங்கள்

### ‘குரலற்றவர்களின் குரல்’ அமைப்பு வலியுறுத்து

யாழ்ப்பாணம்,டிசம்பர்30

அரசாங்கத்துடன் பேரம் பேசத் தயாராகும் மக்கள் பிரதிநிதிகளும் புலம்பெயர் வாழ் தமிழரும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அதிக கரிசனை காட்ட வேண்டும். மொத்தக் கைதிகளின் விடுதலையை எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி சுதந்திர தினத்திற்குள் சாத்தியமாக்க வேண்டும் என ‘குரலற்றவர்களின் குரல்’ அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் தெரிவித்தார். 8




## சு.கவின் பெயர்ப்பலகை மட்டுமே மைத்திரியிடம்

### மீண்டும் வெடித்தது சொற்போர்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெயர்ப்பலகை மாத் திரமே மைத்திரி தரப்பிடம் உள்ளது. கட்சி ஆதரவாளர்கள் எம் பக்கமே உள்ளனர் – என்று அமைச்சர் மஹிந்த அமரவீர ஊடகங்களிடம் 2

## கால்பந்து ஜாம்பவான் காலமானார்



பிரபல கால்பந்து ஜாம்பவான் பீலே உடல் நலக் குறைவால் நேற்றிரவு 2

## நிபந்தனையின்றி பேச்சுக்குச் செல்லாதீர்; நீதி கிடைக்கும் வரை போராட்டம் தொடரும்

### வவுனியாவில் உறவுகள் கோஷம்




(வவுனியா நிருபர்)

காணாமல் ஆக் கப்பட்டோரின் உறவு களால் வவுனியாவில் கவனயீர்ப்புப் போராட் டம் இன்று முன்னெடுக் கப்பட்டது. வவுனியா பழைய பஸ் நிலையம் முன்பாக இந்தப் போராட்டம் இடம்பெற்றது. 8

## அக்கரைப்பற்றில் பாடசாலையை மூடுமாறு அதிகாரிகளை மிரட்டும் அதாவுல்லா எம்.பி.

### அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு குற்றச்சாட்டு



அக்கரைப்பற்று அஸ்–ஸபா கனிஷ்ட வித்தியாலயத்தை மூடு மாறு அதிகாரிகளை அதாவுஉல்லா எம்.பி. மிரட்டுகின்றார் என்று அப்பாடசாலையின் அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு செயலாளர் எஸ்.எம். லாபீர் குற்றம் சாட்டு கின்றார்.

அக்கரைப்பற்றில் நேற்றிரவு நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## அக்கரைப்பற்றில்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து வெளியிட்ட அவர், எங்களின் பிரதேசத்தில் உள்ள வறுமைப்பட்ட மீனவ, விவசாய, கைத்தொழில் செய்யும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் நீண்டதூரம் பயணித்து கல்வி கற்க முடியாது என்பதனால் பிரதேசத்தில் உள்ள முக்கிய சிவில் அமைப்புக்கள் மற்றும் கல்வித்துறை சார்ந்தவர்கள் இணைந்து உருவாக்கப்பட்ட கமு/அக்/அஸ்-ஸபா கனிஷ்ட வித்தியாலயத்தை இழுத்து மூடுவதற்கு முன்னாள் அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாவுல்லா தொடர்ந்தும் முயற்சித்து வருகின்றார்.

கடந்த 2015 இல் இப்பாடசாலையை உருவாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு 2018 இல் இருந்து இந்தப் பாடசாலையை கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பூரண அனுமதியுடன் இயங்கவைத்து வருகின்றோம்.

மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், மாகாண கல்வி பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்வி அதிகாரி உட்பட பல்வேறு அரச அதிகாரிகள் நன்றாக ஆராய்ந்த பின்னரே இந்தப் பாடசாலையை உருவாக்க அனுமதி வழங்கினர்.

இப்போது அந்த அதிகாரிகளுக்கும் மிரட்டல் விடுக்கும் நிலையில் முன்னாள் அமைச்சர் அதாவுல்லா செயற்படுகின்றார். பாடசாலைக்கான காணி விடயத்தில் அக்கரைப்பற்று பிரதேச செயலாளரையும் அவர் கடிந்து கொண்டு வருகின்றார்.

அரச அதிகாரிகளை மிரட்டும் இவரது செயற்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை, நாடாளுமன்றம் ஆகிய இடங்களுக்கும் தெரியப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அரசியல் அதிகாரம் இருக்கின்றது என்பதற்காக எந்த அரசியல்வாதியும் இப்படியான காட்டுமிராண்டித்தனமான செயலைச் செய்ய அனுமதிக்க முடியாது. இவருக்கு எதிராக உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யத் தீர்மானித்துள்ளோம்.

இந்தப் பாடசாலை விடயத்தில் அதாவுல்லா தொடர்ந்தும் குடைச்சல் தந்தால் ஜனாதிபதி செயலகத்தின் முன்னால் மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகிய நாங்கள் எல்லோரும் திரண்டு போராடுவோம்.

எங்களது பாடசாலை உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து இந்த வலயத்தில் உள்ள 72 பாடசாலைகளுடன் போட்டி போட்டுக்கொண்டு முன்னேறி வருகின்றது.

மும்மொழி ஆற்றல் கொண்ட அதிபரைப் பாடசாலைக்கு அதிபராகக் கொண்டு வந்துள்ளோம். நாட்டின் இன்றைய நெருக்கடியிலும் பாடசாலை பௌதீக வள அபிவிருத்தி நடக்கின்றது. இவைகளெல்லாம் அதாவுல்லா போன்றவர்களுக்கு உறுத்தலாக உள்ளது - என்றார்.

## விடுதியில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்க்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்றிரவு 7.30 மணியளவில் மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத மர்மக் கும்பல் விடுதியில் நின்றவர் மீது வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டு தப்பிச் சென்றுள்ளது.

சம்பவத்தின் போது படுகாயமடைந்தவர் 21வயதான பண்டத்தரிப்புப் பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரிய வந்துள்ளது.

வாள்வெட்டுக்கான காரணம் தெரியவராத நிலையில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## போதைப்பொருள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரசாரச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

அரசு சரியாக நிர்வாகம் செய்தால் இந்தப் போதைப்பொருள் பாவனை இல்லாமல் போயிருக்கும். போதைப்பொருள் பாவனை அதிகரிப்பதற்கு இந்த அரசின் பிழையான நிர்வாகமே காரணம். போர்க்காலத்தில் விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல்களை மிகவும் இலகுவாக ஒழித்த கடற்படையால் இன்று போதைப்பொருட்களை ஏற்றி வரும் கப்பல்களைப் பிடிக்க முடியாமல் உள்ளது.

பலமான கடற்படை கட்டமைப்பை நிறுவினால் நிச்சயம் இவற்றைப் பிடிக்கலாம்.

இந்தப் போதைப்பொருள் வர்த்தகத்துக்கும் அரசியல்வாதிகளுக்கும் தொடர்பு இருக்கின்றது.

போதைப்பொருள் வர்த்தகர் மாக்கந்துர மதூஷ் கொல்லப்பட்டார். இந்தக் கொலைக்குப் பின் பிரதான போதைப்பொருள் வர்த்தகர்கள் உள்ளனர்.

மிகப் பெரிய போதைப்பொருள் வர்த்தகத்துக்குப் பின்னால் அரசியல்வாதிகள் உள்ளார்கள். இவர்களைத் தண்டித்தால் இந்தப் போதைப்பொருள் பாவனையை ஒழிக்கலாம். நாம் ஆட்சிக்கு வந்தால் இதைச் செய்வோம் - என்றார்.

## அரசியல்வாதி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

'இலங்கையில் மிகப்பெரிய போதைப்பொருள் வர்த்தகத்துக்குப் பின்னால் நாடாளுமன்றத்திலுள்ள உயர்மட்ட அரசியல்வாதிகள் உள்ளார்கள்' என்று ஜே.வி.பியின் பரப்புரைச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் குற்றஞ்சாட்டியுள்ளமை தொடர்பில் நீதி அமைச்சரிடம் வினவிய போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அது பற்றி எனக்குத் தெரியாது. இதை யார் செய்தாலும் பிழைதான். அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். இலங்கைக்குப் போதைப்பொருள்களை அரசியல்வாதிகளே கொண்டு வருகின்றார்கள் என்பதற்குச் சரியான தகவல்களை - ஆதாரங்களை எம்மிடம் தந்தால் அவர்களுக்கு எதிராக நிச்சயம் சட்டத்தை நடைமுறைப்படுத்துவோம். அவர்கள் சக நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்பதற்காக அவர்களுக்குச் சார்பாக நடக்கமாட்டேன். இதை வரலாற்றில் நான் நிரூபித்துக் காட்டியுள்ளேன்.

2007ஆம் ஆண்டில் நான் கோப் குழுவின் தலைவர். அப்போது நடாளுமன்ற உறுப்பினர்கள் பலரின் ஊழலை அந்தக் குழுவின் அறிக்கையின் ஊடாக நாடாளுமன்றில் அம்பலப்படுத்தினேன்.

நான் நினைத்திருந்தால் எனது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் காப்பாற்றி எதிர்க்கட்சி உறுப்பினர்களை மாத்திரம் குற்றஞ்சாட்டி இருக்கலாம். அப்படிச் செய்யவில்லை. இரு தரப்பிலும் உள்ள குற்றவாளிகளை அடையாளம் காட்டினேன். அதனால் தான் இரு தரப்பும் சேர்ந்து என்னைத் தாக்க முற்பட்டனர். அதற்கு முன் நான் எதிர்க்கட்சிக்குத் தாவிவிட்டேன் - என்றார்.

## சு.கவின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார். அத்துடன், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ரீலங்கா சுதந்திரக் கட்சி எவ்வாறு போட்டியிடும் என்பது பற்றி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், தாங்களே உண்மையான சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கூறியுள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஐக்கியம் எது வரை?

சந்தர்ப்பவாதத்துடன் நடந்து கொள்வதுதான் அரசியல்வாதிகளின் போக்கு.

தமிழர் தரப்பில் அத்தகைய அரசியல்வாதிகளில் ஒரு பகுதியினர் இப்போது 'ஐக்கியம் முக்கியம்' குறித்து பேசப் புறப்பட்டிருக்கின்றார்கள். நல்லது.

அதுவும் நீதியரசர் சீ.வி.விக்னேஸ்வரன் இந்த ஒற்றுமை, ஐக்கியம் என்றெல்லாம் உபதேசம் செய்வதில் மிக முன்னணியில் இருக்கின்றார்.

இலங்கைத் தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவைக் கிள்ளுக் கீரையாக எண்ணி நடத்தியவருக்கு இப்போது மாவை மீது பற்று, பாசம், மரியாதை எல்லாம்பொத்துக் கொண்டு வந்து விட்டது. அவரைத் தலைவராக ஏற்று, அவரின் கீழ் ஒன்றுபட்டு, செயற்படத் தயாராம் நீதியரசர் விக்னேஸ்வரன்.

தமிழரசைப் பயன்படுத்தி, முதலமைச்சர் பதவியில் நின்று, அதன் மூலம் அரசியல் செல்வாக்கை வளர்த்துக் கொண்டு, தனக்கு ஓர் எம்.பி. பதவியை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகத் தனிக் கட்சி அமைத்தவர் விக்னேஸ்வரன். இப்போது தனக்கும் அந்த ஓர் எம்.பி. பதவியை உறுதி செய்து கொண்டு, இனி தமிழரசுக்குள் ஊடுருவி அதை அழிப்பதற்கு மாவை என்ற மண்குதிரையை நம்பி களமிறங்குகின்றார் போலும்.

நல்லது. ஒற்றுமை பேசும் தரப்புகளிடம், அவர்கள் மதித்து பெருந்தலைவராக மாலை போடத் தயாராக இருக்கும் மாவை சேனாதிராவிடமும் சேர்த்து, ஒரு கேள்வி.

தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் வரும் பெப்ரவரி நடுப் பகுதியில் – அதாவது இன்னும் ஒன்றரை மாதங்களில் – இரண்டரை ஆண்டுகளைக் கடக்கின்றது.

அதன்பிறகு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எந்த நேரத்திலும் இந்த நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை அறிவிக்க முடியும்.

அப்படி அறிவித்தால் –

எம்.பி. பதவியை இழக்கும் நீதியரசர் விக்னேஸ்வரன், அதற்குப் பின்னரும் 'ஐக்கிய முக்கியம்' என்றபடி கூட்டமைப்பு பட்டியலில் மாவையுடன் அவர் தலைமையில் யாழ் மாவட்டத்தில் களமிறங்குவாரா அல்லது தன் கட்சிப் பட்டியலில் தனித்துப் போட்டியிடுவாரா?

ஏன், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்த பெரும் விசனத்தில் இருக்கும் மாவை போன்றோர் 'ஐக்கிய முக்கியம்' என்பதற்காக விக்னேஸ்வரன் போன்றோரை பொது பட்டியலில் தனக்கு போட்டியாளராக சேர்த்து வைத்துக்கொண்டு தேர்தலில் குதிப்பாரா?

பொதுத் தேர்தல் இப்போதைக்கு வராது, ரணில் அதற்குப் போக மாட்டார் என்ற நம்பிக்கையில் 'ஐக்கியம் முக்கியம்' எனப் பேசுகின்றார்கள் விக்னேஸ்வரன், மாவை போன்றோர்.

தங்கள் வெற்றிக்கும், தேவைக்கும் பிரிந்து நின்று பொதுத் தேர்தல் மோதியவர்கள், காரியமாற்றியவர்கள், இனி நடக்கப் போவது உள்ளூராட்சித் தேர்தல் என்பதால் கீழ் மட்டத்தில் தொண்டர்கள்தானே, அவர்கள் இணைந்து செயல்படலாம் என்று கயிறு விடுகின்றார்கள்.

பொதுத் தேர்தல் போன்ற ஒன்றில் இத்தகைய முடிவுக்கு – ஒற்றுமைப்பட்ட தீர்மானத்திற்கு – வந்து தேர்தலில் குதிப்பதற்கு இந்தத் தலைவர்கள் தயார் என்றால் அது நன்றாக இருக்கும்.

# அரசியல் காரணிகளுக்கு அவதானம் செலுத்த முடியாத நிலைமையில் நாடு!

## உள்ளது என்கிறார் செஹான் சேமசிங்க



அரசியல் மட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஒருசில தவறான கருத்துக்கள் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சில் தாக்கம் செலுத்தியதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சு தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கையின் பிரதான நிலை கடன் வழங்குநர்களுடன் இடம்பெற்ற பேச்சு சாதகமாக உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் முதல் வாரத்தில் இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் தனிப்பட்ட முறையில் பேச்சில் ஈடுபட தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை இம்மாத இறுதியில் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்திருந்ததாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இருப்பினும் பிரதான நிலை கடன் வழங்குநர்களின் கடன் காப்புறுதி கிடைப்பனவில் தாமதம் ஏற்பட்டதால் தங்களது எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் காரணிகளுக்கு அவதானம் செலுத்த முடியாத நிலையில் நாடு உள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் தேர்தலை நடத்தினால் குறைந்தபட்சம் 1000 கோடி ரூபா செலவாகும் எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். அரச சேவையாளர்களுக்கு சம்பளம், சுகாதாரம் உட்பட நலன்புரி சேவைகளுக்கு ஒரு மாதத்துக்கான நிதியை திரட்டிக் கொள்வது சவாலாக உள்ள நிலையில் தேர்தலை நடத்தினால் பொருளாதார பாதிப்பு ஒப்பீட்டளவில் தீவிரமடையும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வலி.வடக்கு பிரதேசசபையில் இன்று இரத்த தான முகாம்!





வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் இன்று (வெள்ளிக்கிழமை) இரத்ததான முகாம் ஒன்று நடைபெற்றது.

2022 ஆம் ஆண்டின் வேலைநாள்களில் இறுதிநாளான இன்று, வலி.வடக்கு பிரதேச சபையின் கொடுப்பனவுகள் அங்கீகாரம் மற்றும் முக்கிய வேலைத்திட்டங்கள் முன்மொழிவுகள் தொடர்பான விசேட கூட்டம் சபையின் மாநாட்டு மண்டபத்தில் சபை தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது இடம்பெற்ற இரத்ததான முகாமில் பிரதேசசபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், சுகாதாரப் பகுதியினர் எனப் பலரும் இரத்ததானம் வழங்கியிலுந்தனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்தவங்கியினர் இந்த இரத்ததான நிகழ்வை ஒழுங்கமைத்திருந்தனர்.

# அம்பாறை மாவட்டத்தில் இலக்கிய, விருது விழா






(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட இலக்கிய விழா மற்றும் பிரதேச கலைஞர் சுவதம் விருது வழங்கல் நிகழ்வு ஆகியன அட்டாளைச்சேனை மத்திய மகா வித்தியால கேட்போர் கூடத்தில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அகமது ஷாபிர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி. ஜெகதீசனும், அதிதிகளாக சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் மற்றும் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம். றின்சான், சாய்ந்தமருது கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச்.சபிக்காவுன் கலந்து கொண்டனர்.

இதன் போது சாய்ந்தமருது சார்பாக 04 பேர் சுவாதம் விருதுகளையும், மாவட்ட இலக்கிய போட்டியில் 07 பேர் பரிசில்களையும், சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டனர்.

# ரஷ்ய – சீன அதிபர்களிடையே இன்று காணொலியூடாகப் பேச்சுவார்த்தை



மொஸ்கோ, டிச.30

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் மற்றும் சீன அதிபர் ஜி ஜின்பிங் இருவரும் காணொலி காட்சி வாயிலாக இன்று பேச்சுவார்த்தை நடத்த உள்ளனர் என கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், இன்று நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையின் போது இரு நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்தும், பிராந்திய அளவிலான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்தும் இரு அதிபர்களும் பேச்சுவார்த்தை நடத்தப்படும்” எனத் தெரிவித்தார்.

உக்ரைனுடனான போர் காரணமாக சர்வதேச நாடுகள் ரஷ்யா மீது கடுமையான பொருளாதாரத்

தடைகளை விதித்ததோடு, ரஷ்யாவின் எரிபொருள் ஏற்றுமதியையும் தடை செய்தன. இந்தச் சூழலில் ரஷ்யாவிடம் இருந்து சீனா தற்போது அதிக அளவில் எரிபொருள் இறக்குமதி செய்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆறாவது முறையாக இஸ்ரேல் பிரதமராக பதவியேற்றார் பெஞ்சமின் நெதன்யாகு!



ஜெருசலேம், டிச.30

இஸ்ரேலில் கடந்த மாதம் பொதுத்தேர்தல் நடந்தது. இது அங்கு 4 ஆண்டுகளில் நடந்த 5 ஆவது பொதுத்தேர்தல் ஆகும். இத்தேர்தலில் பெஞ்சமின் நெதன்யாகும் – யாயிர் லாபிட் இடையே நேரடி போட்டி நிலவியது.

இந்நிலையில் நடந்த தேர்தலில் நெதன்யாகு தலைமையிலான வலதுசாரி கூட்டணி 64 இடங்களை பிடித்து ஆட்சி அமைத்துள்ளது. எதிர்த்து போட்டியிட்ட கூட்டணிக்கு 51 இடங்கள் மட்டுமே பெற்றது.

நெதன்யாகுவின் லிகுட் கட்சி சுமார் 32 இடங்களை கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. இதன்மூலம், பெரும்பான்மையுடன் முன்னாள் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மீண்டும் ஆட்சி அமைக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் புதிதாகத் தேர்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெற்றது.

இதில் மொத்தம் உள்ள 120 உறுப்பினர்களில் 63 பேர் புதிய அரசாங்கத்திற்கு ஆதரவாகவும், 54 பேர் எதிராகவும் வாக்களித்தனர். நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றதையடுத்து இஸ்ரேல் பிரதமராக ஆறாவது முறையாக பெஞ்சமின் நெதன்யாகு பதவியேற்றுள்ளார்.





## தொற்றுநோய் நிலைமை குறித்து சீனா விளக்கம் தர வேண்டும் என்கிறது உலக சுகாதார அமைப்பு

பெய்ஜிங், டிச.30

சீனாவில் கொரோனா தொற்றுப் பரவல் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்ற நிலையில், சீனப் பயணிகளுக்கு பல்வேறு நாடுகள் கொரோனா பரிசோதனையை கட்டாயமாக்கி வருகின்றன. இந்த நிலையில் சீன பயணிகளுக்கு அமெரிக்காவிலும் கொரோனாப் பரிசோதனை கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சீனாவில் கொரோனா பரவல் அதிகரித்துவருவது குறித்து உலக சுகாதார அமைப்பு கவலையை தெரிவித்துள்ளது. இதுகுறித்து உலக சுகாதார அமைப்பில் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கூறுகையில், சீனாவில் கொரோனா பரவலின் எழுச்சியால் உலக சுகாதார அமைப்பு கவலை கொண்டுள்ளது. சீனாவில் தொற்றுப்பரவலைக் கருத்தில் கொண்டு சில நாடுகள் அறிமுகப்படுத்தியுள்ள கட்டுப்பாடுகள் புரிந்து கொள்ளக்கூடியனவாக உள்ளன. எனினும், தொற்றுநோய் நிலைமை குறித்து விளக்க சீனா இன்னும் முன்வர வேண்டும்.

சீனாவில் தற்போதைய தொற்று பரவல் பற்றிய விரிவான தகவல்கள் எங்களுக்குத் தேவை. கண்காணிக்கவும், அதிக ஆபத்துள்ளவர்களுக்கு தடுப்பூசி போடவும் சீனாவைத் தொடர்ந்து ஊக்குவித்து வருகிறோம். மருத்துவப் பராமரிப்பு மற்றும் அதன் சுகாதார அமைப்பைப் பாதுகாப்பதற்கான எங்கள் ஆதரவை நாங்கள் சீனாவுக்கு தொடர்ந்து வழங்குகிறோம். என்று அவர் கூறினார்.

# எதியோப்பியாவில் இரு ஆண்டுகள் நீடித்த உள்நாட்டுப் போர் முடிவுக்கு





அடிஸ் அபாபா, டிச.30

கிழக்கு ஆப்பிரிக்க நாடான எத்தியோப்பியாவின் டைக்ரே பிராந்தியத்தில் கடந்த 2 ஆண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டு போர் நடந்து வந்தது. இந்த போரில் அப்பாவிமக்கள் 600க்கும் மேற்பட்டோர் கலவரக்காரர்களால் படுகொலை செய்யப்பட்டனர்.

இதனையடுத்து அந்த பகுதியில் நெருக்கடி நிலையை எத்தியோப்பியா அரசு அறிவித்தது. இதனால் நாட்டின் மற்ற நகரங்களுடனான போக்குவரத்து வசதி திடீரென துண்டிக்கப்பட்டது. மேலும் தொலைபேசி சேவைகளும் நிறுத்தப்பட்டன. இதனால் அங்கு சிக்கி கொண்டவர்கள் தங்களது சொந்தப் பகுதிகளுக்கு கூட செல்ல முடியாமல் கடந்த 2 ஆண்டுகளாக தவித்தனர்.

இந்நிலையில் தற்போது ஆப்பிரிக்க ஒன்றியத்துடனான ஒப்பந்தம் மூலம் உள்நாட்டுப் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு உள்ளது. இதனால் அங்கு சிக்கி கொண்டவர்கள் தங்களது சொந்த ஊர்களுக்கு மகிழ்ச்சியுடன் திரும்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியப் பிரதமர் மோடியின் தாயார் இன்று அதிகாலையில் காலமானார்





ஆமதாபாத், டிச.30

இந்தியப் பிரதமர் மோடியின் தாயார் ஹீராபென் மோடி(வயது 99) .இன்று அதிகாலையில் காலமானார்.

குஜராத் மாநிலம், காந்தி நகர் ரேசானில் பிருந்தாவன் சொசைட்டி பகுதியில் அமைந்துள்ள தனது இளைய மகன் பங்கஜ் மோடியின் இல்லத்தில் வசித்து வந்த நிலையில் அவரது உடல்நிலை திடீரெனஒ பாதிக்கப் பட்டது. இதையடுத்து சில நாள் களுக்கு முன்பு அவர் ஆமதாபாத்தில் உள்ள யு.என்.மேத்தா இதய நோய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இதையடுத்து, மருத்துவமனை சார்பில் வெளியிடப் பட்ட முதல் அறிக்கையில் –

"அகமதாபாத்தில் உள்ள யு.என்.மேத்தா நெஞ்சக மருத்துவமனை மற்றும் ஆய்வு மையத்தில் ஹீராபென் அனுமதிக்கப்பட்டுள்ளார். தற்போது அவரது உடல்நிலை சீராக உள்ளது" எனத் தெரிவிக்கப்பட்டது.

தாயார் ஹீராபென் மோடி, ஆமதாபாத்தில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப் பட்டமையை அடுத்து பிரதமர் மோடி நேரில் வந்து பார்த்து உடல் நலம் விசாரித்தார்.

தொடர்ந்து நேற்று மருத்துவமனை சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் ஹீராபென் மோடி குணமடைந்து வருகிறார் எனத் தெரிவிக்கப்பட்டது இந்த நிலையில், பிரதமரின் தாயார் மறைந்துவிட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

தனது தாயார் இறந்தது குறித்து பிரதமர் மோடி தனது டுவீட்டர் பக்கத்தில் கூறும்போது, ஒரு புகழ்பெற்ற நூற்றாண்டு கடவுளின் காலடியை சேர்ந்துள்ளது. என் தாயிடம், ஒரு துறவியின் பயணத்தையும், தன்னலமற்ற கர்மயோகியின் அடையாளத்தையும், அர்ப்பணிக் கப்பட்ட வாழ்க்கையையும் உணர்ந் துள்ளேன்.'' – என்று உருக்கமாக தெரிவித் துள்ளார்.

# நேரு சிலை கார் விபத்தில் சேதம்; காங்கரஸ் கட்சியினர் போராட்டம்



சென்னை,டிச.30

பூந்தமல்லி, நசரத்பேட்டை அருகே காங்கிரஸ் கட்சியின் சார்பில் முன்னாள் பிரதமர் நேரு சிலை அமைக்கப்பட்டிருந்தது.

இதனை கடந்த 1988 ஆம் ஆண்டு ராஜீவ் காந்திதிறந்து வைத்திருந்தார். தற்போது பூந்தமல்லி பெங்களூர் இடையிலான தேசிய நெடுஞ்சாலை அகலப்படுத்தப்பட்டு வருவதையொட்டி பீடத்துடன் இருந்த சிலையை வேறு இடத்தில் மாற்றி வைக் குமாறு அதிகாரிகள் காங்கிரஸ் கட்சியினரை கேட்டிருந்தனர். இதற்காக சிலையை வைக்க வேறு இடத்தை கட்சியினர் பார்த்து வந்தனர்.

இந்த நிலையில் நேற்று அதிகாலை சென் னையிலிருந்து நச ரத்போட்டை வழியாக ஸ்ரீபெரும்புதூர் நோக்கி வேகமாக வந்த கார் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து சாலை யோரம் இருந்த நேரு சிலை பீடத்தின் மீது மோதி விபத் துக்குள்ளானது. இதில் பீடம் மற்றும் சிலை உடைந்து பலத்த சேதமானது. காரின் முன்பக்க கண்ணாடியும் உடைந்தது. இதில் காரை செலுத்தி வந்த சாரதியும் படுகாயமடைந்தார்.

பொதுமக்கள் அவரை மீட்டு பூந்தமல்லி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.

இது குறித்து தகவல் அறிந்த காங் கிரஸ் கட்சியினர் ஏராளமானோர் அங்கு திரண்டு திட் டமிட்டே சிலையை உடைத்தனர் எனக் கூறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்துக்கு வந்த நசரத்பேட்டை பொலிஸார், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட காங்கிரஸ் கட்சியினரை சமாதானப்படுத்தினர். இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். இந்தச் சம்பவத்தால் அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டதாகக் கூறப் பட்டது.



## சென்னை வந்த விமானங்கள் பனிமூட்டத்தால் தரையிறங்க இயலாமல் திருப்பி அனுப்பபட்டன

சென்னை,டிச.30

சென்னை புறநகர் பகுதிகளில் நேற்று காலை 7 மணிக்கு மேல் கடும் பனிமூட்டம் நிலவியமையால், சென்னை விமான நிலையத்தில் விமான சேவைகள் ஓரளவு பாதிக்கப்பட்டன. இதன் காரணமாக கத்தார் நாட்டு தலைநகர் டோஹாவில் இருந்து 248 பயணிகளுடன் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்துக்கு காலை 7 மணிக்கு வந்த விமானம் தரை இறங்க முடியாமல் பெங்களூருக்கு திருப்பி அனுப்பப்பட்டது. கோவையில் இருந்து 92 பயணிகளுடன் காலை 7.30 மணிக்கு சென்னை வந்த விமானம் தரையிறங்க முடியாமல் மீண்டும் கோவைக்கே திரும்பி சென்றது என்றும் கூறப்படுகின்றது.

மேலும், காலை 7.30 மணிக்கு பெங்களூரில் இருந்து 84 பயணிகளுடன் சென்னை வந்த விமானம் தரையிறங்க முடியாமல் பெங்களூருக்கே திருப்பி அனுப்பப்பட்டதுடன், காலை 7.30 ம ணிக்கு மும்பையில் இருந்து 138 பயணிகளுடன் வந்த விம ானமும் தரையிறங்க முடியாமல் கோவைக்கு திருப்பி விடப்பட்டன.

மேலும் மும்பை, கொல்கத்தா, பெங்களூரு மற்றும் மலேசியா வில் இருந்து வந்த 6 விமானங்கள் சென்னையில் தரையிறங்க முடியாமல் வானில் தொடர்ந்து வட்டமடித்துக் கொண்டு இருந்தன என்றும் சென்னையில் இருந்து புறப்பட வேண்டிய மஸ்கட், பெங்களூரு, ராஜமுந்திரி, கொல்கத்தா, டெல்லி ஆகிய 5 விமா னங்களும் தாமதமாக புறப்பட்டு சென்றன என்றும், வானிலை சீரானதும் திருப்பி அனுப்பப்பட்ட 4 விமானங்களும் மீண்டும் சென்னை திரும்பி வந்தன எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# இந்தியாவில் 'சீட் பெல்ட்' அணியாததால் வீதி விபத்துகளில் 16 ஆயிரம் பேர் சாவு!

புதுடெல்லி, டிச.30

இந்தியாவில் கடந்த 2021ம் ஆண்டில் நடந்த 4 லட்சத்து 12 ஆயிரத்து 432 சாலை விபத்துகளில் 1 லட்சத்து 53 ஆயிரத்து 972 பேர் உயிரிழந்துள் ளனர்.

சாலை விபத்துகளின்போது, 4 சக்கர வாகனங்களில் 'சீட் பெல்ட்' அணியாததால் 16 ஆயிரத்து 397 பேர் இறந்துள்ளனர். இவர்களில் 8,438 பேர் சாரதிகள் எனவும், எஞ்சிய 7,959 பேர் பயணிகள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

'சீட் பெல்ட்' அணியாமல் விபத்தில் சிக்கி 39 ஆயிரத்து 231 பேர் காயம் அடைந்தும் இருக் கிறார்கள். மேலும் ஹெல்மெட் அணியாமல் இருசக்கர வாகனங்களை ஓட்டி விபத்தில் சிக்கி 46 ஆயிரத்து 593 பேர் பலியாகி உள்ளனர். ஹெல்மெட்?அணியாமல் சென்று விபத்தில் அகப்பட்டு, காயம் அடைந்தவர்கள் எண்ணிக்கை 93 ஆயிரத்து 763 எனவும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

டாடா சன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் சைரஸ் மிஸ்திரியும், அவரது நண்பர் ஜகாங்கிர் பந்தோலும் சீட் பெல்ட் அணியாத நிலையில் கார் விபத்தில் சிக்கி கடந்த செப்டம்பர் மாதம் 04ஆம் திகதி பலியாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# களுவாஞ்சிக்குடியில் சமாதான ஒளிவிழா!






(வி.ரி.சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தின் வருடாந்த ஒளி விழா நிகழ்வு பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது.

அருட்பணிஜே. மார்ஸ்ல்(புனிதயூதாததேயுதேவாலயம், தேற்றாத்தீவு), அருட்திரு ஐ. அமலதாஸ்(கெத்செமனே சுவிசே சபை, பெரியகல்லாறு) ஆகியோரின் ஆசிச்செய்தியுடன் ஆரம்பமான இந் நிகழ்வினை தொடர்ந்து மாணவர்களினால் கரோல் கீதம், நாடகம், நடனம் போன்ற பல கலைநிகழ்வுகள் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து நத்தார் தாத்தா வருகையும், நிகழ்வுகளை ஆற்றுகை செய்த மாணவர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கான பரிசு வழங்கலும் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் த. நிர்மல்ராஜ், நிர்வாக உத்தியோகத்தர் வே.தவேந்திரன், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திருமதி புவனேஸ்வரி ஜீவகுமார், முகாமைத்துவ பணிப்பாளர் கே உதயகுமார், மேலதிக மாவட்ட பதிவாளர் அ. பேரின்பநாயகம் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# போதைப்பொருள் பாவனையாளரின் திருமணத்தை நடத்தி வைக்க மறுப்பு

## அக்கரைப்பற்று ஜும்மா பெரிய பள்ளிவாசல் முடிவு

(பாறுக் ஷிஹான்)

போதைப்பொருள்பாவனைக்குஉள்வாங்கப்பட்ட நபர் ஒருவரின் திருமணத்திற்கான சமய அங்கீகாரத்தை அக்கரைப்பற்று ஜும்மா பெரிய பள்ளிவாசல் நிராகரித்துள்ளது.

அக்கரைப்பற்று ஜும்மா பெரிய பள்ளிவாசல் பிரதேசத்திற்குள் வசித்து வரும் நபர் ஒருவரின் திருமணத்தை நடாத்தி வைக்குமாறு ஜும்மா பெரிய பள்ளிவாசலுக்கு விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தது.

அந்த விண்ணப்பத்தை பரீசீலனைக்காக எடுத்துக் கொண்ட ஜும்மா பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை இந்த நபர் போதை பொருள் பாவனைக்கு உள்வாங்கப்பட்டவர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், எனவே திருமண சடங்கை நிறைவேற்றி வைப்பதை தவிர்த்துள்ளதுடன் குறித்த விண்ணப்பத்தையும் நிராகரித்துள்ளது எனத் தெரிவித்துள்ளது.

மணமகனை போதைப் பொருள் புனர்வாழ்வு மையத்தில் அனுமதிப்பதுடன், அங்கிருந்து நற்சான்றிதழ் பத்திரம் பெற்று மீண்டும் பள்ளிவாசலில் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. இவ்விடயம் சமூக ஊடகங்களில் முக்கிய பேசு பொருளாக மாறி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# போதைப் பொருள்களுடன் கல்முனையில் ஒருவர் கைது




கேரளா கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவரை கல்முனை தலைமையகப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய நேற்று வியாழக்கிழமை இரவு இக்கைது சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பொலிஸ் குழுவினர் கல்முனை மஹ்மூத் பெண்கள் பாடசாலைக்கு அருகில் வைத்து கேரளா கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப்பொருளை சூட்சுமமாக கொண்டு சென்ற 35 வயதான சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

கைதான சந்தேக நபர் வசம் இருந்து ஹெரோயின் 6 கிராம் 680 மில்லி கிராம் மற்றும் கேரளா கஞ்சா 1 கிராம் 900 மில்லி கிராம், சுமார் முப்பதாயிரம் ரூபா பணம், ஒரு கைத்தொலைபேசி உள்ளிட்டவைகள் கல்முனை தலைமையக பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை சான்று பொருள்களுடன் கல்முனை தலைமையக பொலிஸார் நீதிமன்ற நடவடிக்கைக்காக ஆஜர் செய்ய ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சேனையூரில் இலக்கிய கூடலும் முது கலைஞர்கள் கௌரவிப்பும்





(இரா.ரஜீந்திரமூர்த்தி)

அனாமிகா நினைவுப் பேருரையும், கலை இலக்கியகூடலும், முதுகலைஞர்கள் மாண்டுறுத்தல் நிகழ்வும் நேற்று மாலை திருகோணமலை சேனையூர் அனாமிகா பண்பாட்டு நிலையத்தில் அதன் இயக்குநர் கவிஞர். இரா. இரத்தினசிங்கம் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வில் கிழக்குப்பல்கலைக்கழகத்தின் ஓய்வு பெற்ற பேராசிரியர் செ. யோகராஜா முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பண்பாட்டு மையத்தின் நிறுவுநர் பேராசிரியர் பாலசுகுமார் மாண்டறு பேருரை நிகழ்த்தியிருந்தார். இதன் போது சேனையூர், கட்டைபறிச்சான் பிரதேசத்தைச் சேர்ந்த 33 கலைஞர்கள் பொன்னாடை போர்த்தியும் நினைவுச் சின்னங்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.

சிறப்பு நிகழ்வாக கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# 55 ரூபாவுக்கு முட்டை விற்பனை செய்யும் நடவடிக்கை ஆரம்பம்!



55 ரூபாவுக்கு முட்டையை நுகர்வோருக்கு நேரடியாக விற்பனை செய்யும் நடவடிக்கை புதன்கிழமை ஆரம்பமானது.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கும், கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியாளர் சங்கம் உள்ளிட்ட சில சங்கங்களுக்கிடையில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைவாக, இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையின் முதல் கட்டமாக கொழும்பு மற்றும் கம்பஹா பிரதேசங்களில் முட்டை விற்பனை முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவும் லொரிகள் மூலம் விற்பனை செய்யப்பட்ட முட்டைகளைக் கொள்வனவு செய்தார்.

இதற்கு மேலதிகமாக நாட்டில் அனைத்து பொருளாதார மத்திய நிலையங்கள் மற்றும் சதோசவிற்பனைநிறுவனங்களுக்கும்முட்டைகளை விநியோகிக்கப்பதற்கு விவசாய அமைச்சு வசதிகளை மேற்கொள்ளவுள்ளது.

## மினுவாங்கொடையில் ஆயுதங்களுடன் மக்களால் பிடிக்கப்பட்டுள்ள நபர் பொலிஸாரிடம் ஒப்படைப்பு!

மினுவாங்கொடை பிரதேசத்தில் தொடர்ச்சியாக திருட்டில் ஈடுபட்டதாக கூறப்படும் நபர் ஒருவரை பிரதேசவாசிகள் பிடித்து மினுவாங்கொடை பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவம் புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

மேற்படி நபர் மினுவாங்கொடை கட்டுவெல்ல கம பிரதேசத்தை வசிப்பிடமாக கொண்டவராவார்.

கைதுசெய்யப்படும்போது சந்தேக நபரிடம் கூரிய ஆயுதங்கள் பல காணப்பட்டன எனக் கூறும் மினுவாங்கொடை பொலிஸார், இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஜப்பானிய காதலியுடன் இலங்கை வந்து நாடு திரும்பும்போது கட்டுநாயக்கவில் தோட்டாக்களுடன் அமெரிக்க பிரஜை கைது!

இலங்கைக்கு விஜயம் செய்து விட்டு மீண்டும் நாடு திரும்புவதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்றிருந்த அமெரிக்கப் பிரஜை ஒருவரிடமிருந்து 9 மில்லிமீற்றர் ரகத்தைச் சேர்ந்த 10 தோட்டாக்களை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் கைப்பற்றினர்.

38 வயதான அமெரிக்க ஓட்டோ சாரதி ஒருவர் கடந்த ஜுலை மாதம் 12 ஆம் திகதி இலங்கைக்கு வந்திருந்தார். இந்நிலையில் அவர் தனது பயணத்தை முடித்துக் கொண்டு திரும்புவதற்காக புதன்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்தை சென்றடைந்த போது, விமான நிலைய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அவரது பயணப் பொதிகளை ஸ்கேனிங் இயந்திரம் மூலம் பரிசோதித்தபோது இந்த தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து இது தொடர்பாகக் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து பொலிஸார் அவரை அன்றிரவு கைது செய்தனர்.

மாலம்பே பகுதியில் உள்ள தனது நண்பரின் திருமண நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இந்த அமெரிக்கப் பிரஜை தனது ஜப்பானிய காதலியுடன் இலங்கை வந்திருந்தமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.



# மன்னார் தாராபுரம் பகுதியில் விபத்து!

### இளம் குடும்பஸ்தர் பலி

மன்னார் தலைமன்னார் பிரதான வீதி, தாராபுரம் பகுதியில் நேற்று (வியாழக்கிழமை) காலை இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்

உயிரிழந்தவர் மன்னார் பனங்கட்டுகொட்டு பகுதியை சேர்ந்த இளம் குடும்பஸ்தரான ஆனந்த் கன்பியூசியஸ் விஜய்–(வயது 32) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மன்னாரில் இருந்து பேசாலை நோக்கி பயணித்த பொலிஸ் டிபென்டர் ரக வாகனமும், பேசாலை வீதியூடாக மன்னார் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த இளம் குடும்பஸ்தர் ஒருவரின் மோட்டார் சைக்கிலும் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளன.

இந்தவிபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் வீதியில் தூக்கி வீசப்பட்ட நிலையில், படுகாயமடைந்த நிலையில், வீதியால் சென்றவர்களின் உதவியுடன் மீட்கப்பட்டு அம்புலன்ஸ் மூலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

எனினும் அந்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன்,மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நீர்க் குழாய்களை வெட்டி லொறியில் கொண்டு சென்ற குற்றத்தில் பெலிஅத்த பிரதேச சபை தலைவர் கைது!



பெலிஅத்த மாகில்ல பெரகும் சமூக நீர் இருப்புப் பகுதிக்கு சொந்தமான நீர் குழாய்களை லொறி ஒன்றில் நள்ளிரவில் எடுத்துச் செல்ல முயன்றதாகக் கூறப்படும் பெலிஅத்த பிரதேச சபைத் தலைவர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வாரியப்பொல பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுவரும் நீர் தேக்கத்துக்குச் சொந்தமான குழாய்களை துண்டு துண்டாக வெட்டி லொறியில் ஏற்றிச் சென்றிருந்தபோதே சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரதேச சபைத் தலைவரின் சகோதரர் ஒருவரின் வீட்டில் இந்தக் குழாய்கள் குவிக்கப்பட்டிருந்தன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

# கண்டி மாவட்டத்திலுள்ள பிரதேச சபை பெண் உறுப்பினர்களின் கட்சி பேதமற்ற கூட்டிணைப்பு



கண்டி மாவட்டத்திலுள்ள பிரதேச சபைகளின் பெண் உறுப்பினர்கள் இணைந்து கட்சி பேதமின்றி கூட்டிணைப்பு ஒன்றை நேற்று (வியாழக்கிழமை) உருவாக்கியுள்ளனர். கண்டி டெவோன் ஹோட்டலில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

தேசிய சமாதான சபை மற்றும் கண்டி மாவட்ட சர்வமத அமைப்பு என்பவற்றின் ஆலோசனையுடன் தத்தமது பிரதேசங்களில் அபிருத்தி மற்றும் இன நல்லிணக்க வேலைத்திட்டங்களை செயற்படுத்த இந்தக் கூட்டிணைப்பு முடிவு செய்துள்ளதாக அதன் ஏற்பாட்டாளரும் கண்டி மாவட்ட சர்வமத அமைப்பின் அழைப்பாளருமான காமினி ஜயவீர அங்கு தெரிவித்தார்.

அக்குறணை, கலகெதர, தும்பனை, ஹாரிஸ்பத்துவ, பாத்ததும்பறை,மெததும்பறை, உடதும்பறை, குண்டசாலை உட்பட 20 இற்கும் மேற்பட்ட பிதேச சபைகளின் பெண் உறுப்பினர்கள் இதில் கலந்துகொண்டனர். கண்டி மாவட்ட சர்வமத அமைப்பின் செயலாளர் சுனில் கொக்கல உற்படப் பலர் இங்கு உரையாற்றினர்.

# போதைப்பொருள் தொடர்பில் தகவல்கள் இருந்தால் மாத்திரமே மாணவர்களை சோதனைக்கு உட்படுத்துக!

## பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்து

பாடசாலை மாணவர்களை பரிசோதனை செய்வது தொடர்பில் பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தல்களை விடுத்துள்ளார். போதைப்பொருள் தொடர்பில் தகவல்கள் இருந்தால் மாத்திரமே பாடசாலை மாணவர்களை பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். பாடசாலை மாணவர்களை வீண் சோதனை செய்வதை தவிர்க்குமாறும் பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தியுள்ளார். அத்துடன், வீதிகளில் பாடசாலை மாணவர்களை சோதனையிடுவதையும், காணொளி பதிவு செய்வதையும் தவிர்க்குமாறு பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

### நிபந்தனையின்றி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது காணாமல் ஆக்கப்பட்ட தமது சொந்தங்களின் படங்களையும், பதாதைகளையும் ஏந்தியிருந்த உறவுகள், ராஜபக்ச குடும்பம் பேரக் குழந் தைகளைக் கொஞ்சி மகிழும் போது நாங்கள் பேரக்குழந்தைகளைத் தேடி வீதியில் அழுது திரிகின்றோம், கூட்டமைப்பே நிபந்தனையின்றி ரணில் அரசுடன் பேசாதே!, காணாமல் ஆக்கப் பட்ட உறவுகளுக்கு சர்வதேச நீதி வேண்டும், ஐ.நாவே எமக்கான தீர்வைப் பெற்றுத் தா, வடக்கு – கிழக்கில் இருந்து இராணுவமே வெளியேறு எனக் கோஷங்களையும் எழுப்பினர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அவர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரை விடுதலைப்புலிகள் கொண்டுசென்றிருக்கலாம் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். இந்தக் கருத்துக்கு எமது எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றோம். நாங்கள் யுத்தம் முடிவடைந்த பின் இராணுவத்தினரிடம் கையில் ஒப்படைத்த பிள்ளைகளையும், வைத்தியசாலையில் இருந்தும், வீடுகளில் இருந்தும் இராணுவத்தினரால் கொண்டு செல்லப்பட்ட எமது பிள்ளைகளையுமே தேடுகின்றோம். அதற்கு நீதி கிடைக்கும் வரை எமது போராட்டம் தொடரும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நிபந்தனையின்றி அரசுடன் பேச்சுக்குச் செல்லாது தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்காகச் செயற்பட வேண்டும் – என்றனர். (100)

### மோடியின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட இலங்கையின் அரசியல் தலைவர்கள் இரங்கல் செய்திகளை வெளியிட்டுள்ளனர்.

### கால்பந்து......

முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலமானார். பிரேசில் நாட்டைச் சேர்ந்த வயது 82 வயதுடைய பீலேவுக்குக் கடந்த வருடம் பெருங்குடலில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு புற்றுநோய் கட்டி அகற்றப்பட்டது.

எனினும், கடந்த சில நாட்களாக அவரது உடல்நலம் பலவீனமடைந்திருந்தது. இதையடுத்து, பிரேசிலின் சாவ் பொல்ஹொ பகுதியில் உள்ள வைத்தியாலையில் கடந்த மாதம் இறுதியில் பீலே சேர்க்கப்பட்டிருந்தார்.

எனினும், புற்றுநோய் வேகமாகப் பரவியதால், நுரையீரல், இதய செயல் இழப்பு தொடர்பான சிகிச்சைகளுக்கான அதிநவீன பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், இதயம் மற்றும் சிறுநீரகம் தீவிரமாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே சிகிச்சை பலனின்றி கால்பந்து ஜாம்பவான் பீலே உயிரிழந்துள்ளார் என்று அவரது மகள் தனது இண்ஸ்டாகிராம் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

பீலே 21 வருட கால்பந்து விளையாட்டு வாழ்க்கையில் 1,363 போட்டிகளில் 1,281 கோல்களை அடித்ததன் மூலம் உலக சாதனை படைத்தார். இதில் 92 போட்டிகளில் 77 கோல்கள் அடங்கும்.

1958, 1962 மற்றும் 1970 ஆகிய ஆண்டுகளில் உலகக் கோப்பையை மூன்று முறை வென்ற ஒரே வீரரான பீலே, 2000 ஆம் ஆண்டில் ஃபிஃபாவின் நூற்றாண்டின் சிறந்த வீரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### 32 அரசியல்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ் அரசியல் கைதிகள் குற்றமிழைத்தவர்களாகக் காணப்பட்டாலும், அவர்களுக்கு மன்னிப்பளித்து, சமூகத்துடன் இணைந்து வாழ வழி காட்ட வேண்டும். இதை விடுத்து தமிழ்த் தரப்பும் இதை வைத்து அரசியலை மேற்கொள்வதை தவிர்க்க வேண்டும். பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப இன நல்லிணக்கம் எனும் புதிய விடயத்தை கூறினாலும் 32 அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யப்படும் தருணமே இந்த நல்லிணக்க நிலை சாத்தியமாகும்.

சமாதான பேச்சு ஆரம்பிக்கப்பட்ட நிலையில் தமிழ்ப் பிரதிநிதியினர் இவ் அரசியல் கைதிகள் விடுதலை விடயத்தை வலியுறுத்தி நல்லிணக்கத்தின் முதற்படியாக அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வதே நல்லிணக்கத்தின் ஆரம்ப சமிக்ஞையாக அமையும். தமிழரசுக் கட்சி தலைவர் மாவை சேனாதிராசா , நாடாளுமன்ற உறுப்பினர்களான விக்னேஸ்வரன் மற்றும் சித்தார்த்தன் போன்றோரை சந்தித்த வேளையிலும் கூட அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாக அதிக கரிசனை காட்டுமாறு வலியுறுத்தினோம்.

தற்போது 19 பேரின் வழக்குகளே நீதிமன்றில் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. ஏனையவர்கள் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரிலே விடுவிப்பதற்கான சாத்தியங்கள் அதிகம். நீதிமன்றங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வழக்குகள் துரித கதியில் இடம்பெற்றிருந்தால் அனைத்து கைதிகளும் விடுதலையாகியிருப்பதற்கான சாதக நிலை காணப்படும். பொதுவாக ஒரு நாட்டில் போர் நடைபெற்ற பின் அதில் பங்கெடுத்த அரசியல் கைதிகளை விடுவித்து நல்லிணக் கத்தை ஏற்படுத்துவதே நிலைமை.

நல்லிணக்கத்திற்கான பேச்சுக்கள் ஆரம்பமாக முன்னர் காணி விடுவிப்பு மற்றும் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பான விடயங்கள் தொடர்பில் அதிகம் வலியுறுத்தவுள்ளதாக தமிழரசுக் கட்சியின் தலைவரை சந்தித்த வேளை அவர் கூறினார் – இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.12.2022 இல் வெளியிடப்பெற்றது.